**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 339/2019 |
| Name | : Nehru Gandhi |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2024

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று பழனியில் வசித்து வருகிறேன். கடந்த 08.10.2017 ம் தேதி இரவு 00.30 மணிக்கு கொமரலிங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நானும், என்னுடன் உதவி ஆய்வாளர் சண்முகம் மணல் திருட்டு சம்மந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் முதல் நிலை காவலர் சதீஷ் குமார் என்பவருடன் ரோந்து அலுவலாக என்.ஜி.புதுர் பகுதியில் வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது என்.ஜி புதுர் மேற்கு புறம் ஆற்று படுகையிலிருந்து வந்த TATA ACE பிக் கப் வாகனத்தை நிறுத்தி விசாரித்த போது அதை ஓட்டி வந்தவர் நெய்காரப்பட்டி

முகம்மது இஸ்மாயில் என்பவரை விசாரித்து அவரது சுய லாபத்திற்காக ஆற்றில் இருந்து சுமார் 1 யூனிட் மணல் எடுத்து வருவதாக கூறியவரையும், அவருடன் இருந்த மற்றும் மூன்று நபர்களை குற்றத்தை எடுத்துக்கூறி கைது செய்து அவர்களையும், வாகனத்தையும் அதில் இருந்த மணலையும் காவல் நிலையம் கொண்டு வந்து காவல் உதவி ஆய்வாளர் மேற்படி1 யூனிட் ஆற்று மணலுடன் கூடிய மகேந்திரா பிக் கப் வாகனத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் சாட்சியாக நானும், என்னுடன் வந்த சதீஷ் குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.18 16:18:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்